முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

OS.277/2018 தேதி: 29.11.2024

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 (சௌந்தரராஜன், த/பெ. மாசிலாமணி) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது கையெழுத்து மட்டும்தான் போடத்தெரியும். நான் பெயிண்டிங் வேலை செய்கிறேன். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் 3 செண்ட் அது மாசிலாமணியின் பட்டா சொத்து. மாசிலாமணியின் பெயருக்கு பட்டா உள்ளது அவருக்கு வழக்கு சொத்து எப்படி பாத்தியம் என்றால் அவர் வழக்கு சொத்தில் குடியிருந்தார் அரசாங்கம் பட்டா கொடுத்தது எப்போது என்ற விவரம் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்து மாசிலாமணியின் சொத்து என்றோ பட்டா உள்ளது என்றோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பட்டா நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் மாசிலாமணியின் 3வது மகன். என் தகப்பனாருடன் பிறந்தவர்கள் சிவக்கொழுந்து, மாயவன், மற்றும் ஏழுமலை.

2. வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் என்னிடம் அனுமதி வாங்கி வழக்கு சொத்தில் தங்கியிருப்பதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி வழக்கு சொத்தில் குடியிருக்கிறாரா என்றால் 4,5 இடத்தில் குடியிருந்து தற்போது தாவா இடத்திற்கு வந்துள்ளார்கள். வழக்கு சொத்து மாசிலாமணிக்கு மட்டும் பாத்தியமா அல்லது அவரது சகோதரர்களுக்கும் பாத்தியமா என்றால் சகோதரர்கள் அனைவருக்கும் பாத்தியம் உண்டு. வாதிகள் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். எங்களை கேட்காமல் எங்களது அப்பாவும் அவரது சகோதரர்களும் வாதிக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்தது தவறானது.

3. எங்களைக் கேட்காமல் ஏன் கிரையம் கொடுத்தீர்கள் என்று கேட்டேனா என்றால் நான் அவ்வாறு எந்த கையெழுத்தும் போடவில்லை என்று தெரிவித்தார். எனது அப்பாவின் சகோதரர்கள் வாதியுடன் சேர்ந்து கூட்டுசதி செய்து தாவா சொத்தின் வா.த.சா.ஆ.1 கிரைய ஆவணம் எழுதப்பட்டது. வா.த.சா.ஆ.1 ல் ஏழுமலை கையெழுத்து போடவில்லை. அதன்பின்னர் பஞ்சாயத்து கூட்டி என் அப்பா மற்றும் அவரது சகோதரர்கள் தாவா சொத்தின் கிரையத்தை எழுதிக்கொடுத்தார்கள் என்றால் என் அப்பா மற்றும் அவரது சகோதரர்களை வாதி அடித்து வா.த.சா.ஆ.2 ல் கையெழுத்து வாங்கினார்கள். அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் அளித்தேன். அந்த புகாரின் மீது காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்தார்கள். எப்போது புகார் கொடுத்தேன் என்றால் 5 வருடங்கள் இருக்கும்.

4. புகார் கொடுத்த விவரம் மற்றும் குற்ற வழக்கு விவரத்தையோ எனது பிரமாண

வாக்குமூலத்திலோ, எதிர் வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வாதியின் வீடு ஓட்டுவீடா என்றால் கூரைவீடாக இருந்தது கல்வீடு கட்டும்போது தடுத்துவிட்டேன். வழக்கு சொத்திற்கு வடக்கில் நான் குடியிருக்கிறேன். நாங்கள் குடியிருக்கும் சொத்து என் தகப்பனாருக்கு பாத்தியமான புறம்போக்கு சொத்து. அந்த 3 செண்ட் சொத்தையும் என் அப்பா வாதியிடம் எனக்கு தெரியாமல் விற்றுவிட்டார் என்றால் விற்கவில்லை ஆனால் வாதிகள் எழுதிவாங்கிவிட்டனர். வழக்கு சொத்தை காலிசெய்யுமாறு வாதிகள் எங்களிடம் சொன்னார்கள் என்றால் சொன்னார்கள் ஆனால் நாங்கள் காலிசெய்யவில்லை.

5. நாங்கள் வழக்கு சொத்தை காலிசெய்ய சொல்லி வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். நாங்கள் குடியிருக்கும் இடத்திற்கு வீட்டுவரி உள்ளது மின்சார இணைப்பு உள்ளது. வாதிகள் குடியிருக்கும் இடத்திற்கு அவர்கள் தான் வீட்டுவரி மற்றும் மின்சார இணைப்பு வரி கட்டிவருகிறார்கள் என்றால் நாங்கள் தான் கட்டிவருகிறோம். மின்சாரஇணைப்பு மற்றும் வீட்டு வரி மாசிலாமணி பெயரில் உள்ளது. வாதிகள் வீட்டுவரி மற்றும் மின்சார வரி ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அவை தவறாக பெறப்பட்டவை. வாதிகளை காலி செய்ய சொல்லி நாங்கள் வழக்கு போட்டுள்ளோமா என்றால் போட்டுள்ளோம்.

6. வா.த.சா.ஆ 1 மற்றும் 2ல் என் அப்பா மற்றும் அவரது சகோதரர்கள் கையெழுத்து போட்டுள்ளார்களா என்று என்னால் பார்த்தால் சொல்ல இயலும். நாங்கள் குடியிருக்கும் 3 செண்ட் இடம் சம்மந்தமாக யாருமே கையெழுத்து போடவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.8 ல் உள்ள புகைப்படம் என் தகப்பனாருடையது என்றால் சரிதான். வா.த.சா.ஆ 8 சம்மந்தமாக தாலுகா அலுவலகத்தில் விசாரித்தேன் கிரையம் ஆகிவிட்டதாக கூறினார்கள் அந்த கிரையம் பரமசிவம் மனைவி பானு பெயரில் பதிவாகியுள்ளது என்றால் பானு யார் என்று எனக்கு தெரியாது.

7. சொத்துக்களை கிரையம் கொடுத்துவிட்டு தவறாக கட்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. என் தகப்பனார் கிரையம் கொடுத்த 3 செண்ட் இடத்தில் நாங்கள் வாதியின் அனுமதியின் பேரில் குடியிருக்கிறோம் என்றாலும் அதை காலிசெய்ய கடமைப்பட்டவர் என்றாலும் சரியல்ல. என் அப்பா மற்றும் அவரது சகோதரர்கள் கிரையம் கொடுத்த இடத்தில் வாதிகள் குடியிருப்பதையும் அவர்களது அனுபவத்தையும் எங்களால் தடை செய்ய இயலாது என்றால் சரியல்ல. நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது மற்றும் குற்ற வழக்கு தாக்கல் செய்ததும் தவறு என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

மறுவிசாரணை இல்லை.